**வாக்குமூலம்**

**நீதிமன்றம் இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி**

**வழக்கு எண்.SC 51/2018**

**வழக்கு சாட்சி PW26**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | விஜிகுமார் | ஜாதி | : | இந்து |
| தந்தை பெயர் | : | வேலப்பன் | தொழில் | : | காவல் துணை கண்காணிப்பாளர் |
| கிராமம் | : | எழுதன் கோட்டுகோணம் | சமயம் | : | இந்து |
| தாலுக்கா | : | கல்குளம் | வயது | : | 51 |

**(எதிரிகள் 1, 2, 5 மற்றும் 6 ஆஜர். எதிரிகள் 3 மற்றும் 4 காலமாகிவிட்டார்கள்)**

**தேதி 15.03.2023**

**முதல் விசாரணை**

நான் தற்போது கடலூர் மாவட்ட மதுவிலக்கு அமலாக்க பிரிவில் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.10.2015ம் தேதி நான் ஆற்காடு கிராமிய வட்ட ஆய்வாளராக பணியில் இருந்தபோது வாலாஜாபேட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அ.சா.24 திருமதி.ஜெயலட்சுமி என்பவரால் இரவு 8.45 மணிக்கு எனது விசாரணைக்கு வைக்கப்பட்ட வாலாஜா பேட்டை காவல் நிலைய கு எண்.424/2015 பிரிவுகள் 366, 302 இதச வழக்கின் முதல் தகவல் அறிக்கை நகலை பெற்று பின்பு 9 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான இவ்வழக்கின் வாதி ஆறுமுகம் என்பவருடைய வீட்டின் அருகே சென்று 9.30 மணிக்கு அங்கு காணப்பட்ட சாட்சிகள் அ.சா.14 சங்கர் மற்றும் சா.எண்.23 அசோக்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு சம்பவ இடத்தை விளக்குகின்ற பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் தயார் செய்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.20** ஆகும். பின்னர் சம்பவ இடத்தில் வைத்து சாட்சிகள் அ.சா.1 ஆறுமுகம் அ.சா.2 மணிகண்டன், சா.எண். 9 ருக்மணி, அ.சா.9 கவிதா, சா.எண்.11 ரம்யா, சா.எண்.12 வள்ளி, சா.எண்.13 ராதா, சா.எண்.14 மணி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு

செய்தேன். இரவு நேரம் ஆகியதால் மறுதினம் 25.10.2015 அன்று இறந்துபோன சிவக்குமாரை காரிலிருந்து கீழே தள்ளிய இரத்தினகிரி முருகன் கோயில் மேம்பாலத்திற்கு கிழக்கில் உள்ள சம்பவ இடத்தை காலை 6.30 மணிக்கு அதே சாட்சிகள் சங்கர் மற்றும் அசோக்குமார் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு சம்பவ இடத்தை விளக்குகின்ற அ.சா.ஆ.3 பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.21** ஆகும். பின்னர் காலை 8.30 மணிக்கு வாலாஜா தலைமை அரசு மருத்துவமனை சவக்கிடங்கிடம் சென்று அங்கு காணப்பட்ட சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்களுக்கு சம்மன் சார்வு செய்து இறந்துபோன சிவக்குமார் என்பவரின் சடலத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.22** ஆகும். பின்னர் பிரேத விசாரணையின் போது உடனிருந்த சாட்சிகள் அ.சா.3 கார்த்திகேயன், அ.சா.4 ஜெயக்குமார், அ.சா.5 தயாளன், சா.எண்.15 ஜோதிலிங்கம், அ.சா.10 மோகன், அ.சா.11 வீரசிங்கம், அ.சா.12 சௌந்தரி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் அ.சா.14 சங்கர் மற்றும் சா.எண்.23 அசோக்குமார் ஆகியோர்களை விசாரித்து மீண்டும் வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இறப்பின் உண்மை நிலை அறியும்பொருட்டு பிரேத பரிசோதனை செய்ய தகுந்த வேண்டுகோள் கடிதம் கொடுத்து காவலர் அ.சா.19 தீனதயாளன் என்பவரை நியமித்தேன். நான் கொடுத்த வேண்டுகோள் கடிதம் ஏற்கனவே அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் 30.10.2015 ம் தேதி எனக்கு கிடைத்த தகவலின் படி திருவண்ணாமலை சென்று இவ்வழக்கின் எதிரியாகிய கார்த்திக் தகப்பனார் கண்ணன் என்பவரை விசாரிக்க அவர் கொடுத்த தகவலான தனது மகளின் கணவர் ஆனந்த் (எ) ஆனந்தபாபுவுடன் வாலாஜா சென்றபோது ஏதோ சம்பவம் நடந்ததாகவும் தனது மகன் கார்த்திக் பெங்களூரில் உள்ள தனது மருமகன் வீட்டிற்கு சென்றிருப்பான் என கொடுத்த தகவலின் படி எங்களுடன் வந்த சாட்சிகள் அ.சா.15 காந்தி மற்றும் சா.எண்.25 சதீஷ்குமார் ஆகியோருடன பெங்களூரு

பரிமளா நகர் 2வது மெயின் ரோட்டில் சென்றபோது அவர் வீட்டின் பின்பு நின்றிருந்த நபர் போலிஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டவுடன் ஓடியவரை பிடித்து பெயர் விலாசம் விசாரிக்க அவர் பெயர் ஆன்ந்த் (எ) ஆனந்தபாபு என்றும் இவ்வழக்கு சம்மந்தமாக ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க முன்வந்ததாலும் அதே சாட்சிகள் காந்தி மற்றும் சதீஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் எந்த வித துன்புறுத்தலோ, ஆசை வார்த்தைகளோ இன்றி அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை 31.10.2015ம் தேதி காலை 9 மணி முதல் 10.30 மணி வரை பதிவு செய்தேன். அவர் ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் தன்னுடன் சம்பவத்திற்கு வந்த எதிரிகள் வீட்டையும் சம்பவத்தில் பயன்படுத்திய காரையும் எடுத்து ஆஜர் செய்வதாக அழைத்ததின் படி காலை 11 மணிக்கு ஆனந்தபாபு அடையாளம் காட்டிய ரஞ்சித் என்பவரை இவ்வழக்கு சம்மந்தமாக கைது செய்தேன். பின்னர் ஆனந்தபாபு அடையாளம் காட்டிய அருண் (எ) அருண்குமார் என்பவரை காலை 11.30 மணிக்கு இவ்வழக்கு சம்மந்தமாக கைது செய்தேன். 2ம் எதிரி ஆனந்த் (எ) ஆனந்தபாபு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் அவர் அழைப்பின் படி 11.45 மணிக்கு நந்தினி லே அவுட்டில் அமைந்துள்ள எதிரி அருண் (எ) அருண்குமார் வீட்டின் அருகிலிருந்து எதிரி ஆனந்தபாபு என்பவரால் அடையாளம் காட்டப்பட்டு ஆஜர்படுத்தப்பட்ட இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட KA 02 AE 1694 என்ற சில்வர் கலர் இண்டிகா காரை அதே சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.5 கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். ( கார் ஆஜர்படுத்தப்படவில்லை) பின்னர் எதிரிகள் மற்றும் சொத்துக்கள் சகிதம் மாலை 7 மணிக்கு நிலையம் ஆஜராகி எதிரி கைது பற்றிய விவரங்களை உறவினர்களுக்கு தெரிவித்து கைது செய்யப்பட்ட எதிரிகளையும் கைப்பற்றப்பட்ட சொத்தினையும் படிவம் 95 மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 02.11.2015 அன்று இவ்வழக்கின் 1வது எதிரியாகிய கார்த்தி என்பவரை பற்றி விசாரித்தபோது மேற்படி எதிரியானவர் திருவண்ணாமலை நீதித்துறை நடுவர் எண் 1 நீதிமன்றத்தில்

சரண் அடைந்துள்ளார் என்றும் 04.11.2015 அன்று வாலாஜா நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உத்தரவு வழங்கப்பட்டுள்ள விவரத்தையும் தெரிந்துகொண்டேன். சம்பவ தினத்தன்று சம்பவத்தில் ஈடுபட்ட இண்டிகா காரை பின்தொடர்ந்து சென்ற நெடுஞ்சாலை ரோந்து வாகனத்தில் அலுவல் முடிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.13 மூர்த்தி, சா.எண்.20 முகமது சுல்தான், சா.எண்.21 ராஜசேகர் ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்களை பதிவு செய்தேன். 04.11.2015 அன்று வாலாஜா நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட இவ்வழக்கின் 1 வது எதிரி கார்த்திக் என்பவரை 3 நாட்கள் போலீஸ் காவலில் விசாரிக்கவேண்டி வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். நீதிமன்ற உத்தரவு சி எம் பி நம்பர் 1365/2015 ன் படி இவ்வழக்கின் 1 வது எதிரியை நீதிமன்றத்திலிருந்து பெற்று நிலையம் அழைத்து வந்தேன். 06.11.2015 ம் தேதி எங்களது அழைப்பின் படி நிலையம் ஆஜரான சாட்சிகள் அ.சா.16 அயூப்கான் மற்றும் அ.சா.17 மோதிலால் நேரு ஆகியோர் முன்னிலையில் காலை 6 மணிக்கு இவ்வழக்கின் 1 வது எதிரியாகிய கார்த்திக் என்பவரை எந்தவித துன்புறுத்தலோ, ஆசைவார்த்தைகளோ இன்றி விசாரிக்க அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் நடந்த சம்பவம் பற்றியும் தன்னை அழைத்து சென்றால் தான் வாலாஜாவிற்கு வந்து மேற்படி கடத்தப்பட்ட பெண்ணை பார்வையிட பயன்படுத்திய இருசக்கர வாகனம் ஹீரோ ேஹாண்டா டான் பதிவு எண் டி என் 25 இ 1641 என்ற வாகனத்தை அம்மூரை சார்ந்த ஏ.சி சேகர் என்பவருடைய வீட்டில் நிறுத்தி வைத்துள்ளதாகவும் தன்னை அழைத்து சென்றால் தான் அதை எடுத்து ஆஜர் செய்வதாகவும் கூறினார். 1ம் எதிரி கார்த்திக் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.23** ஆகும். பின்னர் அதே சாட்சிகள் சகிதம் எதிரி அழைப்பின் படி அம்மூரில் வடக்கு சைதாப்பேட்டை தெருவில் உள்ள ஏ சி சேகர் என்பவர் வீட்டின் முன்பிருந்த எதிரி அடையாளம் காட்டிய ஹீரோ ேஹாண்டா டான் பதிவு எண் டி என் 25 இ 1641 என்ற கருப்பு

நிற இருசக்கர வாகனத்தை ஏ. சி சேகர் என்பவரால் ஆஜர்படுத்தப்பட்டு அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜர் மூலம் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.24 ஆகும். (அந்த இருசக்கர வாகனம் ஆஜர்படுத்தப்படவில்லை) பின்னர் சாட்சிகள் அ.சா.16 அயூப்கான், அ.சா.17 மோதிலால் நேரு மற்றும் அ.சா.21 ஏ.சி சேகர் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 1வது எதிரி மற்றும் சொத்து சகிதம் நிலையம் வந்து 1வது எதிரியை இவ்வழக்கு சம்மந்தமாக நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும் கைப்பற்றப்பட்ட சொத்தை படிவம் 95 மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன். 23.11.2015 அன்று இவ்வழக்கில் சாட்சியாகிய அ.சா.2 மணிகண்டன் என்பவர் எதிரிகளை நேரில் பார்த்தவர் என்பதால் அவருக்கு பயிற்சி அடையாள அணிவகுப்பு நடத்த அனுமதி கேட்டு வேலூர் முதன்மை குற்றவியல் நடுவர் அவர்களுக்கு தகுந்த அ.சா.ஆ.15 வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். 24.11.2015 அன்று DIS No.3400/2015 ன் படி சோளிங்கர் நீதித்துறை நடுவர் அவர்களை அடையாள அணிவகுப்பு நடத்த பரிந்துரை செய்த உத்தரவு கிடைக்கப்பெற்றேன். 08.12.2015 அன்று சோளிங்கர் நீதித்துறை நடுவர் அவர்கள் வழங்கிய சம்மனை பெற்று மத்திய சிறை மற்றும் சாட்சி மணிகண்டன் ஆகியோருக்கு சார்வு செய்ய காவலர் அ.சா.18 காதம்பரி அவர்களை நியமனம் செய்தேன். சம்மன் சார்வு செய்த அ.சா.18 காதம்பரியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 10.12.2015 அன்று பயிற்சி அடையாள அணிவகுப்பு முடித்தபின்பு சாட்சி மணிகண்டன் என்பவரை நிலையம் அழைத்து மீண்டும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 11.12.2015 அன்று சாட்சி மணிகண்டன் அளித்த வாக்குமூலத்தின் படி வாலாஜா பேருந்து நிலையத்தின் அருகே சம்பவத்தினை பார்த்துள்ள சாட்சிகள் அ.சா.6 பிரபு, அ.சா.7 ஜமால், அ.சா.8 தாமோதரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்களை பதிவு செய்தேன். 18.12.2015 அன்று எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி உதவி ஆய்வாளர் ஜெயலட்சுமி மற்றும் பிரபா ஆகியோர் சகிதம் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 1வது எதிரி கார்த்திக் என்பவரது தகப்பனார் கண்ணன் என்பவரது வீட்டிலிருந்து இவ்வழக்கினில் கடத்தப்பட்ட லாவண்யா என்பவரை

மீட்டும் பெண் உதவி ஆய்வாளர் ஜெயலட்சுமி என்பவர் மூலம் சா.எண்.29 லாவண்யாவை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும் மேற்படி நபரை வாலாஜா நீதித்துறை நடுவர் எண் 2 அவர்களிடம் ஆஜர்படுத்தப்பட்டது. மீண்டும் சாட்சிகள் லாவண்யா, உதவி ஆய்வாளர் அ.சா.24 ஜெயலட்சுமி, ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் அ.சா.1 ஆறுமுகம் என்பவரை மீண்டும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விசாரணையின் போது அவர் ஆஜர் செய்த லாவண்யா என்பவருக்கு திருமண ஏற்பாடு செய்யப்பட்ட திருமண அழைப்பிதழை பெற்றுக்கொண்டேன். அந்த திருமண அழைப்பிதழ் **அ.சா.ஆ.25** ஆகும். இவ்வழக்கில் எதிரி ஆனந்த் (எ) ஆனந்தபாபு என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட டாடா இண்டிகா கார் வாகனத்தின் படிவம் 95 **அ.சா.ஆ.26** மற்றும் 1வது எதிரி கார்த்தி என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஹீரோ ேஹாண்டா டான் இருசக்கர வாகனத்தின் படிவம் 95 **அ.சா.ஆ.27** ஆகும். பின்னர் இறந்துபோன சிவக்குமார் என்பவரது பிணக்கூராய்வுஅறிக்கை கிடைக்கப்பெற்று அறிக்கை வழங்கிய மருத்துவர் அ.சா.23 பாலாஜி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 08.01.2016 அன்று வாலாஜா பேட்டை நீதித்துறை நடுவர் எண் 2 அவர்கள் விடுவி எண் 8/2016 ன் படி டாடா இண்டிகா காரின் உரிமையாளர் அ.சா.20 ரமேஷ் என்பவர் வாகனத்தை பெற நிலையம் ஆஜரானவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 04.08.2016 அன்று பகல் 13.00 மணிக்கு இவ்வழக்கின் 1வது எதிரியாகிய கார்த்திக் மற்றும் 5வது எதிரி சிவா என்பவரின் தந்தை முருகன் ஆகியோர்களுடன் நிலையம் ஆஜர் செய்யப்பட்ட இவ்வழக்கின் 5வது எதிரியாகிய சிவா என்பவரை இவ்வழக்கு சம்மந்தமாக காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 23.10.2016 அன்று இவ்வழக்கின் அ.சா.1 ஆறுமுகம் என்பவர் திருவண்ணாமலை நகர காவல் நிலையத்தில் ஏற்கனவே புகார் கொடுத்து விசாரணை நடந்துள்ள விவரம் கிடைக்கப்பெற்று திருவண்ணாமலை நகர காவல் நிலையத்தில் இருந்து சமுதாய பதிவு வரிசை எண் 346/2015 ன் சான்றொப்பமிட்ட நகலினை பெற்று அம்மனுவை விசாரணை செய்த சிறப்பு

உதவி ஆய்வாளர் அ.சா.22 குலசேகரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த சமுதாய பதிவு வரிசை எண் 346/2015ன் சான்றொப்பமிட்ட நகல் மற்றும் ஆவணங்கள் ஏற்கனவே அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் 15.11.2016 அன்று மாலை 17.30 மணிக்கு இவ்வழக்கின் தலைமறைவு 6வது எதிரியாகிய சிவா (எ) சிவக்குமாரை பெங்களூர் நந்தினி லே அவுட்டில் 7வது கிராஸில் அமைந்துள்ள அவரது வீட்டின் முன்பு வைத்து கைது செய்து கைது பற்றி அவரது உறவினருக்கு தெரிவிக்கப்பட்டது. பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தின் படி பெங்களூரில் அமைந்துள்ள ஜி கே மோட்டார்ஸ் சென்று சேதமடைந்த இண்டிகா காரை சரி செய்தது சம்மந்தமான ஆவணங்கள் கேட்டு விசாரிக்க அவர்கள் விசாரணைக்கு ஒத்துழைக்கமால் ஆவணங்கள் இல்லை என்று மறுத்ததால் எதிரி சகிதம் 16.11.2016 அன்று அதிகாலை 3.00 மணிக்கு நிலையம் வந்து 6வது எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் எனது விசாரணையை முடித்து 19.11.2016 அன்று இதச பிரிவு 120பி, 366, 366ஏ, 302 உ/இ 114 மற்றும் 34 இதச படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

1, 2, 5 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட இண்டிகா காரை மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை, ஏனெனில் கைப்பற்றப்படும் போதே சேதப்படுத்தப்பட்ட காரின் முன் கண்ணாடியானது 2வது எதிரியால் சரிபடுத்தப்பட்டது. மேற்படி காரின் முன் பக்க கண்ணாடி உடைக்கப்பட்டது சம்மந்தமாக சாட்சிகளை விசாரித்துள்ளீர்களா என்றால் மேற்படி காரின் முன் கண்ணாடியை சரி செய்த பெங்களூரில் உள்ள ஜி கே மோட்டார்ஸ் என்ற நிறுவனத்தை விசாரிக்க அவர் விசாரணைக்கு ஒத்துழைக்காததால் வாக்குமூலம் பெற இயலவில்லை. அவ்வாறு அவர் விசாரணைக்கு ஒத்துழைக்காதது சம்மந்தமாக பெங்களூர் காவல் ஆணையரிடம் மனு எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. ஆனால் சம்மந்தப்பட்ட காவல் நிலையத்தில் முறையிட்டோம் அப்போது தமிழர்கள் மற்றும் கன்னடர்கள்

பிரச்சனை இருந்துவந்ததால் அவர்கள் ஒத்துழைக்க இயலாது என்று மறுத்துவிட்டனர். மேற்படி முறையிட்டது என்பது வாய்மொழியாக தான் முறையிட்டோம். நான் மேற்படி டாடா இண்டிகா காரை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தியிருக்கவேண்டும் என்றும் ஆனால் தவறிவிட்டதால் மேற்கண்ட விவரங்களை பொய்யாக வரிசைப்படுத்துகிறேன் என்றால் சரியல்ல. 1 மற்றும் 2 எதிரிகளிடம் இருந்து பெறப்பட்டதாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்கள் கைகளால் எழுதப்பட்டதா அல்லது அச்சு செய்யப்பட்டதா என்றால் மடிக்கணினியால் தட்டச்சு செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது. மேற்படி 1 மற்றும் 2 எதிரிகளிடம் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் ஒப்புதல் வாக்குமு'லம் பெறப்படவில்லை என்றும் அதனடிப்படையில் கைப்பற்றுதல் மகஜர்களும் தயார் செய்யப்படவில்லை என்றும் அவைகள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்படவிலலை என்றம் சாட்சிகளிடம் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. ஆனால் 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் போலீஸ் காவலில் இருக்கும் போது காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. 1 மற்றும் 2 எதிரிகள் நான் குறிப்பிடுவதுபோல் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் எந்த பொருட்களையும் எடுத்து ஆஜர்படுத்தப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1வது எதிரி கார்த்தியின் தகப்பனாரை இந்த வழக்கில் சாட்சியாக குறிப்பிடவில்லை. எங்களுடைய வாலாஜா காவல் நிலையம் வாலாஜா பஸ் நிலையத்திற்கு எதிரில் உள்ளதா என்றால் எதிரே தெருவின் உள்பகுதியில் உள்ளது. காவல் நிலைய தெருவுக்கு எதிரே ஒரு கூட்ரோடு ஜங்கஷன் உள்ளது என்றால் சரிதான். அது 4 ரோடுகள் சந்திக்கும் இடமாகும். மேற்படி காவல் நிலையம் மற்றும் 4 ரோடுகள் சந்திப்பு சிசிடிவி போடப்பட்டது என்றால் சம்பவ காலத்தில் அந்த வசதிகள் செய்யப்படவில்லை. அந்த வசதிகள் இருந்தது என்றும் நான் வழக்கிற்கு உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி 4 முனை சந்திப்பில் போக்குவரத்து காவலர் சுமார் 18 மணி நேரம் காவல் பணியில் இருப்பார்

என்றால் சரியல்ல. காவலர்கள் வேறு பணிகள் இல்லாமல் இருந்தால் போக்குவரத்து சீர்செய்ய நியமிப்பது வழக்கமாகும்.மேற்படி 4 ரோடுகள் சந்திப்பில் போக்குவரத்து காவலர் பணியில் இருந்தார் என்றும் நான் வழக்கிற்காக இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் குறித்து எனக்கு வழக்கு பதிவு செய்யப்பட்ட பின்பு 24.10.2015ம் தேதி இரவு 8.45 மணிக்கு வழக்கு பதிவு செய்த விவரம் தெரியவந்தது. வழக்கு பதிவு செய்வதற்கு முன்பு வாலாஜா மருத்துவமனை அருகே சாலைமறியல் நடந்தது சம்மந்தமாக செல்லும் போது இந்த சம்பவம் குறித்த விவரங்களை கேட்டு தெரிந்துகொண்டேன். என்னுடைய அலுவலகம் வாலாஜா காவல் நிலையத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். நான் 24.10.2015 அன்று மாலை 7 மணிக்கு காவல் நிலையத்தில் இருந்தேனா என்றால் நான் மாலை 5 மணியில் இருந்து ரோந்து பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தேன். அ.சா.ஆ.1 புகாரில் வழக்கு சம்பவம் எப்போது நடந்தது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் நேரம் குறிப்பிட்டு எழுதப்படவில்லை. ஆனால் முதல் தகவல் அறிக்கையில் 16.30 மணிக்கு என்று நேரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி புகாரை திருத்தாமல் வாதியினிடம் கேட்டு தெரிந்துகொண்டதன் படி முதல் தகவல் அறிக்கை நேரம் குறிப்பிட்டு பதிவு செய்யப்பட்டது. அவ்வாறு மேற்குறிப்பு எதுவும் முதல் தகவல் அறிக்கையில் செய்யவில்லை. நான் மேலே குறிப்பிட்ட சாலைமறியல் வாலாஜா அரசு மருத்துவமனைக்கு எதிரில் நெடுஞ்சாலையில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அந்த சாலைமறியலில் இறந்துபோன சிவக்குமார், அவருடைய நண்பர்கள் மற்றும் பொதுமக்கள் சேர்ந்து ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். நான் சாலை மறியல் நடந்த இடத்தில் சுமார் 20 நிமிடங்கள் இருந்து சாலைமறியல் செய்தவர்களிடம் விளக்கி கூறி சம்பவம் சம்மந்தமாக முறையாக புகார் அளிக்கவும் காவல் துறை முறையாக நடவடிக்கை எடுக்கும் என்று கூறிய பின்னர் அவர்கள் கலைந்து சென்றனர். சிவக்குமார் விழுந்துகிடந்த இடத்திலிருந்து வாலாஜா மருத்துவமனைக்கு எவ்வாறு கொண்டுவரப்பட்டார் என்றால் சிவக்குமாரை காரிலிருந்து தள்ளிவிட்ட

இடத்திலிருந்து அவரை 108 ஆம்புலன்ஸ் உதவியுடன் வாலாஜா அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தார்கள். நான் 108 ஆம்புலன்ஸ் டிரைவரை இந்த வழக்கில் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். 108 ஆம்புலன்ஸ் ஓட்டுனர் மற்றும் உதவியாளரை இம்மாதிரியான வழக்குகளில் சாட்சியாக சேர்க்ககூடாது என்று அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. சிவக்குமார் விழுந்த கிடந்த இடம் இரத்தினகிரி காவல் நிலைய எல்லை என்றால் சரிதான். நான் இரத்தினகிரி காவல் நிலைய போலிசாரை இந்த வழக்கில் விசாரித்தேனா என்றால் இல்லை, சிறப்பு உதவி ஆய்வாளர் மூர்த்தி எனது விசாரணையில் அதுபற்றி எதுவும் சொல்லாததால் என்னால் வாக்குமூலம் பெறஇயலவில்லை. பொதுவாக காயம்பட்ட நபரை சிகிச்சைக்கு இறந்த நிலையில் கொண்டு வரும் போது மருத்துவமனையில் விபத்து பதிவேடு பதிவு செய்யப்பட்டு குறிப்புகள் செய்யப்பட்டு அதன் பிறகு தான் பிணவறைக்கு அனுப்புவார்கள் என்றால் சரிதான். சிகிச்சைக்கு அழைத்து வரும் போது அழைத்து வரும் நபர்களின் இறப்பானது ஓர் மருத்துவ துறையை சார்ந்த நபரால் உறுதி செய்யப்படுமாயின் விபத்து பதிவேடு பதிவு செய்யப்படுவதில்லை. நான் அவ்வாறு சொல்வது தவறு என்றும் விபத்து பதிவேடு பதிவு செய்யாமல் சம்மந்தப்பட்ட குறிப்புகள் எதுவும் ஏற்படுத்தாமல் பிணவறையில் பிணத்தை வைக்ககூடாது என்று விதிகள் உள்ளன என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் விபத்து பதிவேடு எதுவும் பெறவில்லை, ஏனெனில் விபத்து பதிவேடு பதிவு செய்யப்படவில்லை. விபத்து பதிவேட்டில் வேறு குறிப்புகள் இருந்ததால் அதனை நான் மறைத்துவிட்டு விபத்து பதிவேடு எதுவும் பதிவு செய்யவில்லை என்று உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் விபத்து பதிவேடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் ஆனால் இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட மருத்துவரை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. விபத்து பதிவேடு பதிவு செய்யப்படவில்லை. அடையாள அணிவகுப்பு 44 நாட்கள் தாமதமாக நடத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அடையாள அணிவகுப்பு நடத்துவதற்கு காலக்கெடு எதுவும் கிடையாது. நான் யாரை அடையாள அணிவகுப்புக்கு

சாட்சியாக முன்னிலைப்படுத்தினேன் என்றால் சாட்சி மணிகண்டனை முன்னிலைப்படுத்தினேன். மேற்படி மணிகண்டனுக்கு எதிரிகளுடைய போட்டோ மற்றும் அவர்களை நீதிமன்ற காவலுக்கு அழைத்து வரும்போது மணிகண்டனுக்கு அடையாளம் காண்பிக்கப்பட்டு அதன் பிறகு தான் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.8 தாமோதரன், அ.சா.15 காந்தி ஆகியோர் எனது காவல் நிலையத்திற்கு அருகில் உள்ள கூட்ரோட்டிற்கு அருகே உள்ள ஆட்டோ ஸ்டேண்டில் ஆட்டோ ஓட்டுபவர்கள் என்றும் அவர்கள் எங்களுடைய கையிருப்பு சாட்சிகள் என்றும் எங்களுக்கு பவ்வியப்பட்டவர்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 4 முனை சந்திப்பிற்கு அருகே ஆட்டோ ஸ்டேண்டு எதுவும் கிடையாது. நான் வழக்கிற்காக ஆட்டோ ஸ்டேண்டு எதுவும் கிடையாது என்று உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாலாஜா காவல் நிலையத்திலிருந்து வாலாஜா அரசு மருத்துவமனை சுமார் 1 லிருந்து 1 1/2 கி மீ தொலைவு உள்ளது. முதல் சம்பவம் நிகழ்ந்ததாக சொல்லப்படும் இடம் வாலாஜா காவல் நிலையம் 1 கி மீ தொலைவில் உள்ளது. மேற்படி கூட்ரோட்டிலிருந்து காவல் நிலையம் சுமார் 150 அடி தொலைவு உள்ளது. அந்த கூட்ரோடு காவல் நிலையத்திலிருந்து கண்பார்வைக்கு எட்டும் தொலைவில் இல்லை. மேற்படி கூட்ரோடு சம்மந்தமாக நான் பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்யவில்லை. எங்கள் காவல் நிலையத்தில் அவசர காவல் உதவி எண் 100 உள்ளதா என்றால் கட்டுப்பாட்டு அறைக்கு வரும் அழைப்புகள் எங்கள் காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்படும். இந்த வழக்கில் முதல் சம்பவம் குறித்து காவல் கட்டுப்பாட்டு அறை மூலம் எங்கள் காவல் நிலையத்திற்கு தகவல் எதுவும் தெரிவிக்கப்பட்டதா என்றால் தெரிவிக்கப்படவில்லை. நான் இந்த வழக்கு சம்மந்தமாக மேற்படி 4 முனை சந்திப்பு, வேலூர் ரோடு, சென்னை ரோடு ஆகிய இடங்கிளல் உள்ள சிசிடிவியை கைப்பற்றி புலன் விசாரணை மேற்கொண்டேனா என்றால் அந்த காலகட்டத்தில் சிசிடிவிகள் எதுவும் அமைக்கப்படவில்லை. நான் மேற்படி இடங்களில் அமைந்துள்ள தனியார் சிசிடிவி பதிவுகளை பார்த்தேனா என்றால்

இல்லை. அவ்வாறு தனியார் சிசிடிவிக்கள் அமைக்கப்படவில்லை. நான் வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோன சிவக்குமாரின் பிரேதத்தின் மீதிருந்த ரத்தம் படிந்த துணிகளை தடய அறிவியல் துறைக்கு அனுப்பவேண்டும் என்றால் சரிதான். ஆனால் அனுப்பவில்லை, ஏனென்றால் இவ்வழக்கின் விசாரணை கோணத்தில் அவ்வாறு சாட்சியங்கள் தேவைப்படவில்லை என்பதால் அனுப்பவில்லை. சிவக்குமார் விழுந்த கிடந்த இடத்தில் நாங்கள் செல்லும் போது ரத்தக்கறை எதுவும் காணப்படவில்லை. பார்வை மகஜர்கள் மற்றும் மாதிரிவரைபடங்களில் காட்டப்பட்டுள்ள வீடுகளில உள்ள நபர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் முதல் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள நபர்களில் சிலரை விசாரித்துள்ளேன். 2 வது சம்பவத்தின் அருகே அமைந்துள்ள வீடானது வெகு தொலைவில் அமைந்துள்ள வீடாகும். அவர்கள் சம்பவம் பற்றி தெரியாது என்று கூறியதால் சாட்சியமாக பதிவு செய்யவில்லை. சிவக்குமார் இறந்தது சம்மந்தமாக அவருடைய மனைவி விபத்து வழக்கு நஷ்ட ஈடு கேட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்குதெரியாது. அ.சா.1 திருவண்ணாமலை நகர காவல் நிலையத்தில் தன் மகள் லாவண்யா பொறுத்து கொடுத்த புகாரில் எதிரிகளுடைய பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. அந்த புகாரில் லாவண்யா என்பவர் காணாமல் போய் திரும்ப வந்தது சம்மந்தமாக உள்ளது. அ.சா.ஆ.1 புகார் மற்றும் பிரேத விசாரணை அறிக்கை ஆகியவற்றில் 1ம் எதிரி பெயர் குறிப்பிடப்பட்டு மற்றும் 3 நபர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் இறுதி அறிக்கை மொத்தம் 6 நபர்கள் மீது தாக்கல் செய்துள்ளேன். முதல் தகவல் அறிக்கை மற்றும் பிரேத விசாரணை அறிக்கை ஆகியவற்றில் இருசக்கர வாகனம் சம்பவ சமயத்தில் பயன்படுத்தப்பட்டதாக குறிப்புகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். விசாரணைக்கு பின்பு தான் அதுபற்றிய உண்மை தெரியவந்தது. முதல் தகவல் அறிக்கை மற்றும் பிரேத விசாரணை அறிக்கை ஆகியவற்றில் சம்பவ நேரத்தில் மேற்படி 4 முனை சந்திப்பில் போக்குவரத்து நெரிசல் காணப்பட்டது என்று

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் போக்குவரத்து நெரிசல் என குறிப்பிடப்படவில்லை ஜங்கஷனில் டிராபிக்கில் சிக்கியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.1 ஆறுமுகம் தனது முதல் விசாரணையில் சிவக்குமாருக்கு அடிப்பட்டவுடன் இரத்தினகிரி மருத்துவமனையில் ஆம்புலன்சில் ஏற்றி வாலாஜா அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அவர் என் விசாரணையில் அவ்வாறு குறிப்பிடவில்லை. அ.சா.1 ஆறுமுகம் தனது புகாரிலும் விசாரணையிலும் சிவா அக்கா வீட்டுக்காரர் ஆகியோர் சேர்ந்து 2 சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று சொல்லவில்லை. அ.சா.1 வீட்டின் இரண்டு பக்கமும் வாசல் உள்ளது. இரண்டு வாசல்களும் மெயின்ரோட்டை பார்த்துள்ளது என்றால் 2 வாசல்களும் சாலையை பார்த்துள்ளது. ஒரு வாசலானது காந்தி நகர் தெருவிலும், பின்வாசலானது சிறுவாசலான தேசிய நெடுஞ்சாலையை பார்த்துள்ளது. அ.சா.1 என்னுடைய விசாரணையிலும், புகாரிலும் வி சி மோட்டூர் பைபாஸ் விஷாரம் பக்கம் போகும் போது மணிகண்டன் போன் செய்தார் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். தொலைபேசியில் கூறியதாக உள்ளது ஆனால் இடம் குறிப்பிட்டு சொல்லவில்லை. அ.சா.1 தன்னுடைய புகாரிலும் என்னுடைய விசாரணையிலும் மாமாவை கீழே தள்ளிவிட்டார்கள் என்று மணிகண்டன் தன்னிடம் சொன்னதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளை சாட்சிகள் நீதிமன்றத்தில் அடையாளம் காட்டியது நான் சொல்லிக்கொடுத்தும் போட்டோவை காண்பித்ததன் பேரில் தான் அடையாளம் காட்டினார்கள் என்றால் சரியல்ல. அ.சா.2 மணிகண்டன் என்னுடைய விசாரணையில் எதிரிகள் அருண் மற்றும் ரஞ்சித் அகியோர் பெயர்களை குறிப்பிட்டு சொல்லவில்லை. கார் நெளிந்து வளைந்து சென்றதால் தன் அண்ணன் கார்த்திகேயன் கீழே விழுந்துவிட்டதாக அ.சா.2 தன்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. மோதுவது போல் வந்து சென்றதாக குறிப்பிட்டுள்ளார். ஆற்காடு எஸ் எஸ் எஸ் கல்லூரிக்கு அருகில் நெடுஞ்சாலை போலீசார் நின்றுகொண்டிருந்ததாகவும், காரின் வைப்பரை

உடைத்து அந்த வைப்பரிலேயே கண்ணாடியை உடைக்க முற்பட்டபோது கண்ணாடியில் துளை ஏற்பட்டது என்றும் எதிரி அருண் தனது மாமனார் சிவக்குமாரை கீழே தள்ளிவிட்டார் என்றும் அவர் கீழே விழுந்துவிட்டார் என்றும் அவரை பின்தொடர்ந்து வந்தவர்கள் தங்களை மருத்துவர்கள் என்று சொன்னார்கள் என்றும் தன் மாமாவை பரிசோதித்துவிட்டு இறந்துவிட்டதாக கூறினர்கள் என்று அ.சா.2 என்னுடைய விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் சில கருத்துக்களை கூறியுள்ளார் அதில் அம்மனந்தாங்கல் பாலம் வழியாக வேலூர் நோக்கி செல்லும் நெடுஞ்சாலையில் எஸ் எஸ் எஸ் கல்லூரி உள்ளது. அ.சா.3 கார்த்திகேயன் எனது விசாரணையில் காயம் எதுவும் பட்டதாக சொல்லவில்லை. அ.சா.6 பிரபு என்னுடைய விசாரணையில் தன் வீடு அணைக்கட்டு ரோடு மெயின் ரோட்டில் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளாரா என்றால் குறிப்பிட்டுள்ளார். அ.சா.9 கவிதா என்னுடைய விசாரணையில் தன்னுடைய கணவர் பெண்ணை காப்பாற்றுங்கள் என்று கத்தியதாக குறிப்பிட்டுள்ளாரா என்றால் அவ்வாறு இல்லை. தாங்கள் காரை எடுத்துக்கொண்டு போனபோது டிரைவர் தகராறு செய்ததால் வேறு காரை எடுத்துக்கொண்டு பின்னால் சென்றதாக குறிப்பிடவில்லை. நெடுஞ்சாலையில் விபத்துகள் தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்காக தனியாக போக்குவரத்து விசாரணை பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அவ்வாறு அ.சா.13 தன்னுடைய முதல் விசாரணையில் சொல்லியிருந்தால் தவறாகும். எனது விசாரணையில் அ.சா.13 மூர்த்தி தான் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கும், இரத்தினகிரி காவல் நிலையத்திற்கும், சத்துவாச்சாரி காவல் நிலையத்திற்கும் இருசக்கர வாகனத்தில் வந்த இருவர் சொன்ன தகவல்களை அனுப்பினேன் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் எனது விசாரணையில் அவ்வாறு கூறவில்லை. அ.சா.15 காந்தியை நாங்கள் திருவண்ணாமலைக்கு அழைத்து சென்று அங்கிருந்து பெங்களூருக்கு செல்லும் வழியில் எங்கும் தங்கவில்லை. நான் 08.12.2015ம் தேதி அ.சா.18 காதம்பரி பெண் காவலரை கடவுச்சீட்டு சோளிங்கர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் 2 சம்பவ இடங்கள் சென்றதாகவும் 2 சம்பவ இடங்களில் வைத்து பார்வை மகஜர்கள் மற்றும் மாதிரிவரைபடங்கள் தயார் செய்ததாகவும் அங்கு வைத்து தான்

சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றதாக உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதுபோல் எந்த எதிரியும் ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் எந்த பொருட்களும் ஆஜர்படுத்தவில்லை என்றும் வழக்கிற்காக நானே தயார் செய்து எதிரிகள் மீது பொய்யாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் முறையாக புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது பொய்யாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH